Oslo kommune
**Utdanningsetaten**

2014/2015

# பாடசாலை - இல்ல ஒத்துழைப்புக்கு ஒஸ்லோவின் வரைமுறை









# துறைக்கல்வி மற்றும் கற்பித்தல்

## உங்களது பாடசாலையில் இருந்து நீங்கள் எதை எதிர்பார்க்கலாம்?

- நடைமுறையில் உள்ள சட்டங்கள் அத்தோடு போதனா திட்டங்கள் என்பவற்றின் அடிப்படையில் பாடசாலை கல்வியூட்டுகிறது.
- மாணவரின் கல்வித்திறன் எவ்வாறு உள்ளது என்பதை அவர்கள் முன்னர் பயின்ற பாடசாலை மற்றும் சிறுவர் காப்பு நிலையம் என்பவற்றில் இருந்து பாடசாலை அறியப்பெற்று அதை அடிப்படையாகக் கொண்டு கல்வியூட்டுதலை நடத்தும்.
- தனிப்பட்ட ரீதியிலும் ஏனையோருடன் சேர்ந்து ஒத்துழைப்பதன் ஊடாகவும் மாணவர்கள் தமது திறன்களை மேம்படுத்திக்கொள்ளும் வகையில் பாடசாலை தகுந்த ஏற்பாட்டை செய்து வாய்ப்பளிக்கும்.
- மாணவரின் கல்வி ஆர்வம், அவா அத்தோடு ஆய்ந்து சிந்திக்கும் தன்மை என்பவற்றை பாடசாலை ஊக்குவிக்கும்.
- மாணவர்களின் கல்வி விடயத்தில் ஆசிரியர்கள் ஒத்துழைப்பதை பாடசாலை ஊர்ஜிதப்படுத்தும்.
- பாடசாலையில் உள்ள அனைத்து ஊழியர்களும் ஓர் திடமான முன்மாதிரிகளாகவும் உதாரணங்களாகவும் தென்படுவார்கள்.
- தனது கல்வி ரீதியான மற்றும் சக மனிதர்களுடன் பழகும் இயல்பில் கொண்டுள்ள விருத்தி என்பவை பற்றி மாணவருக்கு ஒழுங்கமைக்கப்பட்ட வழிகாட்டல்களும் அறிவுறுத்தல்களும் வழங்கப்படும். தமது பிரதான ஆசிரியருடன் பாடங்களைப் பற்றி மாணவர்கள் உரையாடுவர்.
- ஆரம்ப பாடசாலைகள் பெற்றோர் பாதுகாவலர்களை மாணவரின் விருத்தி பற்றி உரையாடுவதற்கு வருடத்தில் குறைந்தபட்சம் இரண்டு தடவைகளாவது அழைப்பு விடுவர். மாணவருக்கு எழுத்து மூலமான விமர்சனம் வழங்கப்படும்.
- உயர்தரப்பள்ளிகளில் பாடசாலை ஆரம்பிக்கும் போதும் அதைவிட தேவை ஏற்படும் பொழுதும் பெற்றோர் பாதுகாவலருடன் உரையாடல் நடத்தப்படும். உயர்தரப் பள்ளிகளும் கூட பெற்றோர் சந்திப்புக்களை இடைவிடாது கொண்டுள்ளனர்.

## பாடசாலை - இல்ல ஒத்துழைப்பு ஏன் முக்கியம்?

பாடசாலைக்கும் வீட்டிற்கும் இடையிலான ஓர் நல்ல தொடர்பு மாணவரின் கல்விக்கும் அத்தோடு பாடசாலையில் நல்லுணர்வுக்கும் அவசியம். மாணவன் 6 வயதாக இருந்தாலும் அல்லது 18 வயதாக இருந்தாலும் ஒத்துழைப்பின் முக்கியத்துவம் ஒரே அளவாகும். நான் ஆசிரியராக பணியாற்றி அனுபவம் கொண்டுள்ளபடியால் மாணவர்களின் கல்வி ஆர்வம் அத்தோடு ஊக்கம் என்பன அதிக சந்தர்ப்பங்களில் பாதுகாவலர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் இடையில் உள்ள நெருக்கமான தொடர்பிலேயே தங்கி உள்ளது என்பது எனக்குத் தெரியும். பாடசாலையின் உரிமையாளர்கள் என்ற வகையில் இவ்விடயத்தில் பின்பற்றுவதற்கென எமக்கு சட்டங்கள் மற்றும் விதிமுறைகள் உள்ளன.

Anniken Hauglie, கல்வி மற்றும் அறிவு ஊட்டல் விடயத்தில் நகராட்சி மன்ற அதிபதி



# துறைக்கல்வி மற்றும் கற்பித்தல்



## பாதுகாவலர் என்ற முறையில் உங்களிடம் இருந்து பாடசாலை எதிர்பார்ப்பது:

- மாணவரின் கல்வி ஆர்வம் தகுந்த வண்ணம் உள்ளது எனவும் அத்தோடு வீட்டுப்பாடம், கட்டுரைகள், சோதனைகள் போன்ற பாடசாலை செயற்பாடுகளையும் கவனித்துக்கொள்ள வேண்டும்.
- உங்களது அத்தோடு / அல்லது மாணவரின் எதிர்நோக்குகளை கல்வி ஊட்டுதல் ஈடுசெய்யாத பட்சத்தில் தொடர்பு கொள்ள வேண்டும்.
- தகுந்த ஓய்வைப் பெற்று, காலை உணவருந்தி மற்றும் தகுந்த நேரத்திற்கு சமூகமளித்து அத்தோடு பாடசாலை நாள் முழுவதும் உணவு ஏற்பாட்டை கொண்டிருப்பதற்கு வழியமைக்க வேண்டும்.
- பாடசாலையின் விடுமுறைகள் மற்றும் ஓய்வு நாட்கள் என்பவற்றை பின்பற்றி, பாடசாலை வருடத்தின் ஏனைய நாட்களில் மாணவர் சமூகம் அளிப்பதை கவனித்துக்கொள்ளவேண்டும்
- பாடசாலையின் விதிமுறைகளை மாணவர் பின்பற்றி பாடசாலையில் அனைவருடனும் மதிப்பளித்து பழகுகின்றார்கள் என்பதையும் கவனித்துக்கொள்ளவேண்டும்



# திடநம்பிக்கையும் நல்லுணர்வும்

## உங்கள் பாடசாலையில் இருந்து நீங்கள் எவற்றை எதிர்பாக்கலாம்?

- அனைத்து மாணவர்களும் பாடசாலையில் தாம் வரவேற்கப்பட்டவர்களாகவும் பாதுகாப்பு உணர்வையும் கொண்டிருக்க வேண்டும்.
- மாணவரின் துறை ரீதியான மற்றும் சமூக பிணைப்பு ரீதியான தகமை விடயத்தில் பாடசாலை இடைவிடாது வீட்டுடன் உரையாடிக்கொள்ளும் அத்தோடு எழுத்து ரீதியான அபிப்பிராயங்களையும் பெற்றுக்கொள்ளும்.
- மாணவரின் நல்லுணர்வு விடயத்தில் பாதுகாவலர்களுடன் ஒத்துழைப்பதற்கு பாடசாலை எச்சமயமும் தயார் அத்தோடு அவசியத்து ஏற்ப வண்ணம் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்.
- கேலி செய்தல், வன்முறை அத்தோடு இனவாதம் போன்றவற்றிற்கு பாடசாலையில் மன்னிப்பே கிடையாது, அத்தோடு இவ்வாறான அவமதிப்புக்கள் ஏற்படும் பட்சத்தில் இது கவனத்தில்கொள்ளப்படும்.
- சிறந்த ஓர் பாடசாலை மற்றும் வகுப்பு சூழ்நிலையை ஏற்படுத்தும் வண்ணம் பாடசாலை திட்டமிட்டு செயலாற்றுகிறது.
- பாடசாலை ஊழியர்கள் ஒவ்வொரு மாணவரையும் அறிமுகம் கொண்டு சமூக பந்த விடயங்களில் இவர்களை நெருக்கமாக கவனித்துக்கொள்வார்கள். விசேட சம்பவங்கள் இடம் பெறும் பட்சத்தில் பாடசாலை தொடர்பு கொள்ளும்.



## பாடசாலை - இல்ல ஒத்துழைப்பு ஏன் முக்கியம்?

மாணவர்களின் நன்நிலைமை முக்கியம் என்றபடியால் பாடசாலை - இல்ல ஒத்துழைப்பும் முக்கியம். மாணவர்களின் நன்மைக்கான ஓர் நேர்மையான ஒத்துழைப்பு சமூகவியல் மற்றும் துறையியலின் பெறுபேறுகள் சிறப்பாக அமைய உதவி, அத்தோடு அதிருப்தியை தடுக்க உதவும். ஒத்துழைப்பும் ஈடுபாடும் பெற்றோரிடமும் பாடசாலையிடமும் அதிக அளவு பிணைப்பை ஏற்படுத்தி மாணவர்கள் கற்றுக்கொள்வதற்கு தகுந்த ஓர் அத்திவாரத்தை வழங்குகிறது.

Mona Bjelland, Tonsenhagen பாடசாலையின் FAU-தலைவர்

# திடநம்பிக்கையும் நல்லுணர்வும்



## பாதுகாவலர் என்ற வகையில் உங்களிடம் இருந்து பாடசாலை எதிர்பார்ப்பது:

- பாடசாலை, ஆசிரியர்கள், சக மாணவர்கள் அத்தோடு அவர்களது பாதுகாவலர்கள் என்பவற்றில் தமது பிள்ளைகளுக்கு ஓர் நல்லபிப்பிராயம் வழங்குவதற்கு உற்சாகமாக வழிவகுக்கவேண்டும்.
- உங்களது பிள்ளைக்கு அதிருப்தி ஏற்படும் போது பாடசாலையை தொடர்புகொள்ளவேண்டும்.
- சமூக நிகழ்வுகளில் பங்குகொள்ளவேண்டும்.
- மாணவரின் திடநம்பிக்கை மற்றும் நல்லுணர்வு போன்ற விடயத்தில் ஏனைய பாதுகாவலர்களுடன் ஒத்துளைக்கவேண்டும்.
- பாடசாலையின் ஒழுக்க விதிமுறைகளை மாணவர் பின்பற்றுவதற்கான பொறுப்பை கொள்ளவேண்டும்.



## பாடசாலை - இல்ல ஒத்துழைப்பு ஏன் முக்கியம்?

பரஸ்பர மறைவற்ற தொடர்பு, உரையாடல் அத்துடன் தகவல் பரிமாற்றம் ஆகிய அறிகுறிகளைக் கொண்ட ஓர் நல்ல தொடர்பே பாடசாலைக்கும் வீட்டுக்கும் இடையில் நல்லதோர் ஒத்துழைப்பை ஏற்படுத்தித் தரும். பங்கேற்றல் மற்றும் கூடித் தீர்மானிக்கும் வாய்ப்பை தகுந்த முறையில் பாதுகாவலர்களுக்கு உறுதிப்படுத்துவதற்கு இது மிகவும் அவசியம்.

Knut Erik Brændvang,
Østensjø பாடசாலையின் அதிபர்

# உரையாடலும் ஒத்துழைப்பும்



## உங்களது பாடசாலையிடம் இருந்து நீங்கள் எவற்றை எதிர்பார்க்கலாம்?

- பாடசாலை - இல்ல ஒத்துழைப்பில் ஒஸ்லோவின் வரைமுறை அக்கறையுடன் கவனிக்கப்படும்.
- பாடசாலை சிறந்த தகவல் மற்றும் பரஸ்பர தொடர்பு வழக்கங்களைக் கொண்டுள்ளது.
- வருடம் ஒன்றிற்கு குறைந்த பட்சம் இரண்டு தடவைகள் பெற்றோர் கூட்டத்திற்கு நீங்கள் அழைக்கப்படுவீர்கள்.
- உங்களது கருத்துக்களில் பாடசாலை ஆர்வம் கொண்டுள்ளது, அத்தோடு பாடசாலை தீர்வுகளை காண்பதுடன் நீங்கள் கேட்பவற்றிற்கு பதில்களை வழங்கும்.
- பாடசாலையின் ஒத்துழைக்கும் சங்கங்கள் ஊடாக பாதுகாவலர்கள் செல்வாக்கு செலுத்தலாம்: ஆரம்ப மற்றும் இடைநிலை பள்ளியின் FAU, பள்ளிச்சூழ்நிலை அக்கறைக் குழு அத்தோடு இயக்குநர் குழு.
- தேவைகளின் போது கூட்டங்கள் மற்றும் உரையாடல்களின் பட்சம் மொழிபெயர்ப்பாளரை பாடசாலை உபயோகிக்கும்.



## பாடசாலை-இல்ல ஒத்துழைப்பு ஏன் முக்கியம்?

கல்விக்கு எது முக்கியம் என்பதில் பாடசாலைக்கும் இல்லத்திற்கும் ஒரே மாதிரியான கருத்து இருப்பது மாணவரின் கல்வி சூழ்நிலைக்கு முக்கியமானது. பெற்றோரும் ஆசிரியரும் தாம் ஒரே தகைமை கொண்ட பங்காளிகள் என ஒருவரை ஒருவர் கணிப்பிட்டு உருவாகும் ஓர் நல்ல ஒத்துழைப்பு மாணவரின் கல்விக்கு ஓர் வளமாக அமையும். பாடசாலையும் பெற்றோர்களும் ஒன்றுபட்டு நாம் மாணவருக்கு திட்டவட்டமான குறிக்கோள்களை கொண்டிருக்க வேண்டும்.

Gunnar Aakhus, Øraker பாடசாலையின் ஆசிரியர்

# உரையாடலும் ஒத்துழைப்பும்

## பாதுகாவலர் என்ற வகையில் உங்களிடம் இருந்து பாடசாலை எதிர்நோக்குவது:



- நல்ல ஓர் தொடர்பையும் தகவல் பரிமாற்றத்தையும் உறுதிப்படுத்துவதற்காக பாடசாலையுடன் ஒத்துழைக்க வேண்டும்.
- பெற்றோர் கூட்டங்கள், முன்னேற்ற உரையாடல்கள் அத்தோடு ஏனைய கூட்டங்களில் பங்களிக்கவும், அத்தோடு குறிப்பிட்ட நேரத்திற்கு உங்களால் சமூகம் அளிக்க முடியாத பட்சத்தில் இதனை அறிவிக்க வேண்டும்.
- பாடசாலையின் கருத்துக்கணிப்புக்கு பதில் வழங்க வேண்டும்.
- மாணவரை மற்றும் பாடசாலை தினத்தில் தாக்கத்தை தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய சம்பவங்களை பாடசாலைக்கு அறிவிக்க வேண்டும்.
- மாணவர்கள், ஊழியர்கள் மற்றும் பாடசாலையின் நிர்வாகம் அத்தோடு ஏனைய பாதுகாவலர்கள் ஆகியோருக்கு மதிப்பளித்து விசேடமாக ஏனையோருடன் தொடர்பை ஏற்படுத்தி தகவல்கள்களை பகிர்ந்துகொள்ளும் விடயத்தில் மதிப்பளிக்க வேண்டும்.









Foto: Annette Larsen

jentestreker.no